உளி- 1| ஓசை-65| ஆகஸ்ட்-2022| திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

திகலையரசி - 4
சகா - 5
கண்ணம்மா - 6
ச.ஆனந்தகுமார் - 6
அ.சீனிவாசன் - 7
பிரியா பாஸ்கரன் - 8
வீரமணி - 9
பிரபுசங்கர் க - 10
அன்பழகன் ஜி - 11
மகிழினி காயத்ரி - 11
குபோதினி - 12
சந்துரு ஆர்.சி - 13
அகதா - 13
கனகா பாலன் - 14
வே.புகழேந்தி - 15
மா.காளிதாஸ் - 16
முனியாண்டி ராஜ் - 17
ரகுநாத் வ - 18
கோ.லீலா - 19
பூங்கோதை கனகராஜன் - 19
மதுரா - 20
வே.மு.ஜெயந்தன் - 20
செ.ரா.கிருஷ்ண குமாரி - 21
நீர்ப் பறவை - 22
சுபி - 23
முஸ்னி முர்ஷிட் - 24
மழைக்குருவி - 25
மேகலா செந்தில் குமார் - 25
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 26
ரா.ராஜசேகர் - 27
ஸ்ரீவாரிமஞ்சு - 28
மகேஷ் சிபி - 29
ஷப்ரா இல்முத்தீன் - 30
சரண்யாசத்தியநாராயணன் - 31
ரவி குமாரசாமி - 32
ப.ராஜகுமார் சிவன் - 33
போஸ் பிரபு - 33
முகமது பாட்சா - 34
புன்னகை பூ ஜெயக்குமார் - 34
கி. சரஸ்வதி - 35
சௌவி - 36
கோ.ஸ்ரீதரன் - 37
சுப. முத்துக்குமார் - 38
தீபிகா சுரேஷ் - 39



மலையில் மடிசாய்ந்து கொள்ளும் செங்கதிர்களை
காதலோடு அணைத்துக்கொள்கிறது
வெண்பனியின் தேகம்.

தேக்கு மரங்களை
நாணம் துறந்து பின்னிக் கொள்ளும்
குறுமிளகுக் கொடிகளின் வாசத்தில்
நாள்தோறும்
புதிதாய் முளைக்கிறது
சூரியன்.

தொடர்ச்சியான மலைகளை
அலகில் கவ்விப் பறக்கிறது
அடைக்கலான்குருவி.

குறிஞ்சிப் பாட்டிசைக்கும்
அருவிக்கு ஏற்பத் தலைவிரித்தாடும்
காட்டின் நாட்டியத்தில்
அத்தனை நளினம் !

மூங்கில் மலரின் வாசத்தை
கடத்தும் பட்டாம்பூச்சியும்
நிலவொளியைக் களவாடும்
மின்மினிப் பூச்சியும்
வனாந்திரத்தை
இறகுகளால் போர்த்தி விளையாடுகின்றன.

சிகரத்தில் நின்று
வானத்தைக் கையில் ஏந்துகையில்
காலத்தின் சக்கரம்
இடறி இடறி
பள்ளத்தில் உருண்டோடுகிறது.

வளைந்த சரிவுகளில்
தொங்கிக் கொண்டிருக்கும்
மேகத்தின் மேலமர்ந்து
கட்டங்காப்பியைப் பருகுகிறேன்.
ஒவ்வொரு மிடறிலும்
தொண்டைக் குழிக்குள்
இதமாய் இறங்கி எனக்குள் உறைகிறது
ஒரு மலை நதி.

**தி.கலையரசி**



என்றாவதொரு நாள்
நெடுந்தூரம் பயணித்த
அந்தக் கோடுகள்
இணைந்து போகலாம்...
மொழி பெயர்த்து விட்ட காதலும்
மொழி பெயர்த்து விட்ட கவிதையும்
நமக்கானதாக
இல்லாமல் போகலாம்...
இறுமாப்புக் கொண்ட வண்டுகள்
இதழ் தொடாமல்
வட்டமிட்டுச் செல்லலாம்...
கனவுகள் அறுவைச் சிகிச்சை
செய்யப்பட்டு
மாற்றுப் பாதையில் பயணப்படலாம்...
தொடரும் என முடியும்
முற்றுப் புள்ளிகள்
அடடே சொல்லி
அடுத்த இடம் நகரலாம்...
இந்த லாம்களுக்கு நடுவே தான்
மயிரிழையில்
உயிர் பிழைத்த உணர்வுகள்
வாழ்க்கையாக வலம் வருகிறது...

**சகா**

# டாட்டூ



பச்சைக் குத்த வேண்டுமாம்...
காதலியின் பெயரை...
காசு கேட்டு அடிக்கிறான்...
கூலி வேலைக்கு போகும்
தன் தாயை...!

**கண்ணம்மா**

எடை மேடையில் காசு போட்டவுடன்
சீட்டு வரவில்லை..
அம்மாவும் மற்றவர்களும் எவ்வளவு
சமாதானப்படுத்தியும்
அழுகையை நிறுத்தவில்லை
அம்முக்குட்டி..
வெவ்வேறு நிறங்கள் அணிந்து
வண்ணத்தில் விளையாட்டு
காட்டி சிரிக்க வைத்தது
பழுதான எடை இயந்திரம்..

**ச.ஆனந்தகுமார்**

# மூக்குத்தியதிகாரம்



திக்குத்தெரியாத
இரவு
முழுதும்
முழுதாய்
வழிகாட்ட
ஒளி காட்ட
உன் மூக்குத்தி
ஒன்றே போதும் அன்பே...

உனக்கு மூக்குக்கு
மேல் கோபம் வருமென்றார்கள்.
எனக்கு உன் மூக்குக்கு
மேல் காதல் தானே
வருகிறது!
மூக்கு மேல் பலன்...

எனக்கும் முன்பாக
உன் மூக்கோடு
எப்படி உரசலாம்
அந்த மூக்குத்தி.
எனக்கு மூக்குத்தி
மேல்
கோபம் கோபமாய்
வருகிறது.

மூக்குத்தி அணிவிக்க
முயன்றவனுக்கு
மட்டுமே தெரியும்

இந்தியாவில்
ஹிறிஷிசிஜ விடவும்
கடினமான இன்னொரு
தேர்வு உள்ளதென்ற
விசயம்..

உன் கையால்
மூக்குப்பிடிக்க
சாப்பிட முடிகிறது.
உன் மூக்கைச் சாப்பிட
மட்டும்
அந்த மூக்குத்தி
கொஞ்சமாய்
இடையூறு செய்கிறது.
மற்றபடி
ஐ லவ்
மூக்குத்திங்க!!

வெட்க ஜாமத்தில்
வெட்க ஜாலத்தில்
வெட்கப்போரில்
கவசகுண்டலம்
மூக்குத்தி!
அது மட்டும் தான்
கடைசிவரை உடல் நீங்காமல்..

உன் மூக்குத்தியின் அழகில்
பகலில்
தலைகால்
புரிவதில்லை.

தலைகால் தெரிவதும்
அதே மூக்குத்தியால் தான்
அன்பே!!

உன் மொத்த
அழகையும்
பறந்துவிடாமல்
உன் மூக்கோடு
ஒமீணீஜீறீமீக்ஷீ செய்துவிடுகிறது
உந்தன்
மூக்குத்தி..

அதென்னவோ
மூக்குத்தி
அணியாத இன்னொரு
மூக்கின் மீதுதான்
கூடுதல் ஆசை!
என் கவிதை போலவே
எளிமையாய்
அடக்க ஒடுக்கமாய்
ஈர்க்கின்றது..
..

அய்ம்பத்தைந்து
கிலோ
அழகுக்கு
மில்லிகிராம்
மூக்குத்தியே
பிரதானம்.

அ.சீனிவாசன்

# ஆமென்



என்ன வேண்டும் உனக்கு இப்பொழுது
என்கிறாய்

ஒன்றுமில்லை

உனது துயரம்
எனது இறகுகளைப் பிடுங்குகிறது
உனது கோபம்
என்னைப் பலவீனப்படுத்துகிறது

பிரார்த்தனைக் கூடத்தில்
சிதறுண்டிருக்கும் மனத்தின் மேல்
உனது இராட்சச கொலைவாய்க்
கொன்று புதைத்த குருதிச் சேற்றில்
அந்தகாரத்தில் இடையறாது அலறலில்
கண்ணீரில் அடைபட்டுக் கிடக்கின்றன
பிரத்தியேக நேசங்கள்

அதனைச் சுதந்திரமாய் அவிழ விடு

வேறொன்றுமில்லை.

பிரியா பாஸ்கரன்



அழகாக இருந்தது
அக்காக்கள்
இருந்த தெரு

கூட்டிப்பெருக்கி
வாசல் தெளித்து
குலுங்குகிற
வளைகரங்களில்
தெருக்களின்
துயில் கலையும்

நிலவொளியில்
பாய் விரித்து
அக்காக்கள் சொல்கிற
கதைகளை கேட்டுவிட்டே
ஒவ்வொரு இரவும்
உறங்கப்போகும்

தெரு முனை
கோவில் திறந்தே கிடக்கும்
அம்மைகள்
பக்கத்துவீட்டு திண்ணைகளில்
புளியங்கொட்டைகள் மினுங்க
பல்லாங்குழி
ஆடிக்களித்திருப்பர்

கனகாம்பரம்
தொடுத்துக்கொண்டு
மர்ஃபி ரேடியோக்களில்
ஒலிச்சித்திரம் கேட்ட
அக்காக்கள்
ஒளிச்சித்திரங்கள்

ஒயிலாக அமர்ந்து
நீள் சதுர ஆடிகளில்
வட்ட நிலவை
அலங்கரித்து
கார்குழலில்
மலர்ச்சூடி
வெளிச்சங்களை
வரைவார்கள்

தோழிகளோடு
சில்வர் குடங்களில்
நீர்கொண்டு போவது
தேர் நடந்து போவதைப்போல்
தினசரி திருவிழா

குடங்கள்
பேசிக்களிக்கும் கதைகளால்
நிரம்பித்தளும்பும்

குளக்கரை படிகள்
அக்காக்களின்
கொலுசொலி கேட்க
இடம்பெயராமல் காத்துக்கிடக்கும்

குளத்தில் மிதக்கும்
தாமரை மொட்டுகள்
மையிட்ட விழிகளை
கண்டு மலரும்

குளம்
மருதாணியிட்ட
கைகளை தீண்டி

வட்டவட்டமாய்
சிலிர்க்கும்

குடங்களில் அள்ளி எடுக்கும்
தாமரைக்குளம்
ஒரு குழந்தையைப்போல்
இடுப்பில் ஏறி
அமர்ந்துகொள்ளும்

பந்தலிட்டு வாழைகட்டி
நல்வரவு சொல்லும்
குண்டு வண்ண
சீரியல் பல்புகளோடு
அக்காக்களின்
அழகும் ஒளிரும்

அழகின் நறுமணம்
திருமண வீதியெங்கும் கமழும்

தெருவின் அழகையெல்லாம்
கூறை புடவையின்
முந்தானையில் கட்டிக்கொண்டு
காணாமல் போன அக்காக்கள்

தாவணி அணிந்த
தேவதைகளாகவே
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்
நினைவுகள் திரும்பிப்பார்க்கிற
பால்யத்தின் தெருக்களில்

**வீரமணி**

# அம்மாவின் ஆண்ட்ராய்டு



முதன்முறையாக
அவளுக்கே அவளுக்கான
ஆண்ட்ராய்டு அலைபேசியை வாங்கி
அவள் முன் நீட்டியதும்
ஆனந்த அதிர்ச்சியில்
உறைந்து போகிறாள் அம்மா
“எனக்கெதுக்குப்பா பன்னிரெண்டாயிரம்
கொடுத்து வாங்கினே”
ஜெப மந்திரம் போல
திரும்பத் திரும்ப
புலம்பிக் கொண்டிருக்கிறாள்
ஒவ்வொரு செயலியையும்
எப்படி உபயோகிப்பதென
அவளுக்கு புரியும் வகையில்
பொறுமையாக விளக்கி
உறங்கச் சென்ற பிறகு
திடீரென விழித்துப் பார்க்கையில்
மெல்லிய ஒலியில்
“ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ
உலகம் அறிந்திடாத பிறவியம்மா நீ
பார்வையிலே குமரியம்மா
பழக்கத்திலேகுழந்தையம்மா”
பழைய சிவாஜி பாடலை
யூ-ட்யூபில் ஆச்சரியமாக
பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்
அம்மாவும் அப்பாவும்
எழுதாமலே காணக் கிடைக்கிறது
முடிவிலி காதலைப் பறைசாற்றும்
ஒரு காட்சி கவிதை.....

பிரபுசங்கர் க

## விடியலுக்கு முந்தைய இரவு



காலத்தின் கர்ப்பத்தில்
சர்ப்பத்தின் நாக்கு நீளும்
யுகங்கள் கண்ட தாளாட்டு
ஒப்பாரியாய் ஒலிக்கும்.
நிஜமான விதைகளின்றி
பழங்கள் அழுகும்.
விண்ணில் சிதலைகள் ஊற
விழுதுகள் கைவிரிக்கும்.
கத்தி முனையில்
பூமிப்பந்து சுழலும்.
பிரபஞ்சத்தின் மூலையில்
புழு ஒன்று
பூதக்கண்ணாடிக்குள்
மெல்ல நகரும்.
அதுதான் இந்த யுகத்தின்
கடைசி ஜீவன்.

**அன்பழகன் ஜி**

அண்ணனுக்கு
ட்ரக்கும்
பாப்பாவுக்கு
சொப்பும்
வாங்கிவந்த
பாட்டியைவிட
சைக்கிள் ஓட்டக்
கற்றுக் கொடுத்த
தாத்தாவைத்தான்
அவளுக்கு
மிகவும் பிடித்திருந்தது
பின்னாளில்
ஸ்கூட்ட்டியில்
சிறகுகள்
படபடக்க
பறப்பவளுக்கு

**மகிழினி காயத்ரி**



என்னாயிற்று உனக்கு?
ஏன் இத்தனை கலங்கி நிற்கிறாய்?
அப்படி யார் உன்னை துன்புறுத்துவது?
உன்மனதை கொன்று தின்பது யார்?
தவறுகள் சரிகள் எல்லாம் மனிதர்கள் வரைந்தது
தவறுகளை மறைத்துக்கொள்ளும்வரை
எல்லோரும் நல்லவர்களே
நீ இப்பூமியின் அதிசயம்
உன்னைப்போல் ஒரு உயிர் வேறில்லையே
நீ தனித்து வரையப்பட்ட அழகிய ஓவியம்
அவரவர்க்காய்
உன்னை சிதைக்காதே
கொஞ்சம் எழுந்திரேன்
நீ கடந்த பாதைகளைப்பற்றி என்ன கவலை?
அவை நீ கடந்தவைகள் தானே ?
இதுவும் கடக்கத்தானே போகிறது
கொஞ்சம் பாரமிருக்கும்
சுமக்கப்பழகு
அவ்வளவு தான்
வா இந்த நிழலுக்கும் வெயிலுக்கும் நடுவில்
இந்த தெரு முனைவரை
கொஞ்சம் நடக்கலாம்
ஒரு காப்பி குடித்துக்கொள்
வேண்டுமானால் கொஞ்சம் அழுது விடு
தோள் சாய்ந்து
நான் அழுகையை நிறுத்து என்று
சொல்லாமல்
அணைத்துக்கொள்கிறேன்

குபோதினி



கழுவக் கவிழ்த்த
மீன் தொட்டியில்
தனித்து நழுவிய
ஒற்றைக் கூழாங்கல்லில்
இன்னமும் ஓடிக்கொண்டிருந்தது
ஓடை
புங்கை மர நிழலில்
அணிலுடன் சேர்ந்து
ஆடுகளின் மணிச் சத்தமும்
கேட்கிறது.
உச்சி வெயில் ஓடைச் சரிவில்
இடுப்பு நிமிர்த்தி
விறகுச் சுமையுடன் மேலேறும்
முதியவளின்
துணையிழந்த விசும்பல் ஒலி
மெல்லப்பிரிந்து
மீன் குஞ்சுகளின்
ஏக்கத்துடன் கலந்து
கண்ணாடிச் சுவற்றுக்குள் நீந்திக்கொண்டிருக்கிறது.

சந்துரு ஆர்.சி

எல்.கே.ஜி நேரு பசியால் அழுதுக்கொண்டிருக்க
யு. கே.ஜி இந்திராகாந்தி பிஸ்கெட்
எடுத்துக்கொடுத்தார்
காந்திஜி தன் கண்ணாடியைக்
கடித்துக்கொண்டிருந்தார்
ஜான்சிராணி கடிக்கக்கூடாது என தனது அட்டை
வாளால் கண்டித்தார்
வ.உ.சி குட்டிக்கப்பல் வைத்து டுர்.. டுர் என்று
ஓட்டிக்கொண்டிருக்க கட்டபொம்மன் அதை தடுத்து
நிறுத்தினார்
பாரதியார் ஓடி ஓடி விளையாடிக்கொண்டிருந்தார்
துரத்திப் பிடித்த ஒன்றாம் வகுப்பு மிஸ்
வாயில் ஒற்றைவிரல் வைத்து கப் சிப் என்றார்
பாரதியும் கைகள் கட்டி வாய் மூடினார்

எழுபத்தைந்து ஆண்டுகள் வயதை எட்டிய இந்திய
ஒருமைப்பாடு
சுதந்திர தின விழா மேடைக்குப் பின்னால்தான்
உண்மையில் அரங்கேறிக்கொண்டிருந்தது

அகதா



மூக்குப் பொடியும்
முன்னெத்துன பல்லும்தான்
அடையாளம்
தெக்கு வீட்டு
பெரியம்மாவுக்கு

உள்ளூரு விசயம்
ஒன்னுவிடாம சேர்த்துவச்சி
ஒலுங்கு கடி பொறுக்க
ஒரலு மேல குத்தவச்சி
கூடக் கொறைய திருச்சினாச்சும்
பொரணி பேசுவா
அத்தை ,சித்தி, பாட்டிககூட..

சுப்பம்மாக்க ஓட்டுவீட்டை
கார வீடாக்க
செங்கலு ஒருபக்கம்
மண்ணு மறுபக்கம்னு
மலை போல குமிஞ்சி கெடக்கும்
தெருக்கரண்டு இல்லாத
நாளு
பொடிசுக கூட்டத்துக்கு
பொலபொலனு அவுத்துவிடுவா
ராசாக் கதைகளை

ஒத்தையடிப்பாதை வழி
ஒரு கூட்டம்
அவ பின்னாடி போக
பக்கத்து ஊரு கொட்டகையில
ஒத்தப் படம் பாக்கியில்லாம
பார்த்து ரசிப்பா
மறுநாளு முழுக்க
வரிவரியாச் சொல்லுவா மத்தவக கிட்ட

துஷ்டி வீடு
தூங்காம இருக்கனும்னா
கடுங்காப்பி கூட வேணாம்
கதை சொல்ல அவ இருக்கையில

கல்யாண வீட்டு
காய் நறுக்கும் கூட்டத்தில
பலகைபோட்டு
சிரிக்க சிரிக்கப் பேசுவா
பலபேறப் பத்தி

பெரியய்யா போயி
பத்து வருஷமாச்சி
பெரியம்மாவுக்கு பேச்சு வந்தும்தான்..

கனகா பாலன்



எத்தனை நேரம்பொழிவதென
அறிவுறுத்தாமல் மழையை
களமிறக்கின முகிலினங்கள்.

இடைமறிக்கின்றன
ஓசோனுடன் உரையாடி நடக்கையில்
தூவானமும் சுப்ரபாதமும்.

புல்வெளி
அசைப்போடும் குதிரைகள்
பந்தயக்கால நினைவுகளை.

பலகோடி பூக்களின்
ஜனனமரணம்
அடடே! மீண்டும் குறிஞ்சி.

இறுதி தினச் சங்கொலியில்
கரைந்து விடுகின்றன
அப்பாவின் பணிநாட்கள்.

ஊர்தியிலேயே தங்கிவிடும்
இறுதி ஊர்வலப்பூக்களில் சில
பல ஈக்களுடன்.

பாதிரியாரின் பாவமன்னிப்பில் பவித்திரம்
அடைகின்றன
தேவாலயப் பீடங்கள்.

அடிக்கடி உதிரும் இறகுகள்
பூமியைத் தேடுகையில்
கூடடையும் இரைத்தேடிய பறவை.

ஓடி ஒளிந்தன
ஓணானின் 'கொடி' அசைப்பில்
மற்ற இரு வண்ணங்கள்.

ஆறுமாதமாக முயல்கிறேன்
அமீபாவை வரைந்திட.
முற்றுகையிடும் பட்டாம்பூச்சிகள்.

**வே.புகழேந்தி**



எதையோ தேடுகையில் கிடைக்கிறது
தொலைத்த பழைய சாவி
தொலையும் நாளில்
வீடு முழுக்க நாமும் தேடப்படுகிறோம்
கிடைத்துவிடக் கூடாது என்பதில்
விடாப்பிடியாக இருக்கிறோம்
அத்தனை மூலைமுடுக்குகளின் தூசிகளும் நாசியில்
ஏறுகின்றன
மேடு பள்ளங்களைப் புறந்தள்ளி
திறப்பு ஒன்றே குறியாகிறது
திரும்பத் திரும்ப கவனம் ஈர்க்கிறது
தொங்கவிடும் ஆணி
வளையங்களின் கிண்கிணி சத்தம் வேறு காதைக்
குடைகிறது
அப்போது முடிவெடுக்கிறோம்
எந்தச் சாவியையும்
தொலைக்காதவர்களின் பெருவெளியில்
ஒருநாளாவது
பூட்டாகத் தொங்க வேண்டும்.

மா.காளிதாஸ்



முதலில்
என்னைக் கோபக்காரன் என்றார்கள்
பின் ஒரு படி மேலே போய்
முன்கோபக்காரன் என்றார்கள்
நான் மௌனங்களை விதைத்துக் கொண்டிருந்த
போது
கோழையெனக் கிள்ளிப் பார்த்தார்கள்
கண்களில் எழுந்த சிவப்பில்
அவர்கள்
சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தார்கள்

அரச மரம் ஒன்றனைக் காட்டி
புத்தனாய் அமரச் சொன்னார்கள்
புத்தர்களை உருவாக்குவது மரங்களல்ல என்றதும்
கழுத்தைப் பிடித்து
மதங்களுக்கு வெளியே தூக்கியெறிந்தார்கள்
கோட்பாடுகளைக் காட்டிக் காட்டி
உள்ளத்தைக் கிழித்தார்கள்
ஞானம் தேடி புத்தகங்களுக்குள் தொலைந்த போது
வேதங்களைப் படி என்றார்கள்

என்னை நானே
முதலில் படித்துக் கொள்கிறேன் என்கிறேன்
மீண்டும் கோபங்களுக்குள் தள்ளிவிட்டு
காவிகளை அணிந்து கொள்கிறார்கள்
அவர்கள்!

முனியாண்டி ராஜ்

# அழைப்பின் பக்கம்



முகநூல் மனிதர்களில்
ஏற்றுக்கொள்ளப்பட்டது
முகமறியா நண்பீயின்
நட்பழைப்பு

நட்புகளை மனமுவந்து ஏற்றுக்கொண்டே
பழகிய கவிஞனுக்கு

அழைப்பையேற்ற மறுகணமே ஆபாசத்திற்கு
வருகிறது
மற்றோர் அழைப்பு

முகநூலை சரியாக
வாசிக்கத் தெரியாத
கவிஞனுக்கு

முகமற்றவர்களின் நட்புகளில் சிதைகிறது
நட்பதிகாரம்

ஒன்றுமட்டும் கூறத்தோன்றுகிறது...

‘என்னடா இது
கவிஞனுக்கு வந்த சோதனை’...

ரகுநாத் வ



உதிராமல்//
பூமியெங்கும்
பரவி கிடக்கிறது//
சூரியக்கதிர்கள்.

**கோ.லீலா**

மகாபலிபுரத்தில்
வயிற்றுக்குள் உருளும்
குட்டியோடு
யானை பொம்மை
விற்பனை செய்தவர்
திரும்பத் திரும்பக் கேட்டும்
வரும் அவசரத்தில்
வேண்டாம் என்று
விலக்கி வந்தோம்
மனதில் ஆறு மாதங்கள்
ஆகியும் இன்னும்
உருள்கிறது
அவரது வறுமை.

**பூங்கோதை கனகராஜன்**



அகக்காடுகளில்
ஓயாத பிளிறல்..
அங்குசங்களால்
அடக்கப்பட்ட ஆசைகளின்
உறுத்தல்களில் ஊவாமுள்.

ஒடிந்து கிடக்கும்
இலைதழைகளில்
அவ்வப்போது
வனத்தின் வாசம்.

சுதந்திர வேட்கையின்
முனை மழுங்கிய வேழம்.

வீதியுலா நேரத்தில்
ஒலிக்கும் மணியோசைக்குள்
புதைந்து போகும்
ஓராயிரம் வேண்டுதல்கள்..

முதுகிலேற
பயந்தலறும்
மூன்றுவயது மழலையின்
ஸ்பரிசத்தில் மட்டும்
பூத்து மணக்கிறது
வனப்பூ.

**மதுரா**

மாறுவேட போட்டி
கருமிக்கு கிடைத்தது
கர்ணன் வேடம்..!

**வே.மு.ஜெயந்தன்**



காலடியில் வந்து
மெதுவாய் படுத்துக் கொள்ளும்
பக்கத்து வீட்டு
மஞ்சள் நிற பூனை

அம்மாவுக்கு தெரியாமல்
புத்தகம் வைத்து
மறைத்துக் கொள்வேன்

நான் தலையை
தடவிக் கொண்டேயிருக்க
தூங்கிப் போய்விடும்

மெத்து மெத்தென்ற
அதன் பட்டு உடலை
நான் தீண்ட அனுமதி அளிக்கும்

சிறு ஓசையை கூட உணர்ந்து
திடுக்கிட்டு எழும்
கண்களில் எப்போதும் ஒரு பயம்
சிறு வாய் திறந்து
மியாவ் மியாவ்
என்றழைக்கும் போது
மனம் இளகி விடும்.

அம்மாவுக்கு தெரியாமல் கொட்டாங்குச்சியில் பால்
ஊற்றித் தந்து
அது பருகும் அழகை ரசிப்பேன்

அதன் சிறிய வயிறு
நிரம்பிய மகிழ்ச்சியில்
உறங்கிப் போனேன் நிம்மதியாக.

கனவில் கேட்டது
மியாவ் மியாவ்
என்னும் நன்றி ஓசை.

செ.ரா.கிருஷ்ண குமாரி



இந்த பிரபஞ்சம் ஓர் நாள்
அழிந்தே தீரும் என்பதில்
எள்ளளவும் மாற்றமில்லை

கைமீறிப் போன உறவுகளையும்  பொழுதுகளையும்
தேடித் தேடித்
தொலைவதில் எந்த ஒரு பயனுமில்லை

அன்றில் உறவுகள் மீண்டும் கைவசமாயினும்
விம்பங்கள் சிதறியே கிடக்கப் போகின்றன

பெற்றவள் போல் ஓர் அன்பு என்பதில்
எனக்கு எந்த ஈடுபாடும் இருந்ததில்லை
அவளுக்கு நிகராக  எந்த ஒன்றையும் பொறுத்திப்
பார்ப்பதாய் ஒரு
யோசனையும் எனக்கு இல்லை

அதீத நேசத்தின் கடைசி வார்த்தை
எக்காலமும் ஏதோ ஓர் முற்றுப்புள்ளி தான்
என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை
எனக்காய்க் காத்துக்கொண்டிருக்கும்
ஏதோ ஓர் புள்ளி பற்றி எவ்வித
ஆச்சரியமும் எனக்கு வந்ததில்லை

சில உயிர்களின் பிறப்பின் நிகழ்வை அருகிலிருந்தே
பார்த்துவிட்டேன்
சில உயிர்கள் உலகிடமிருந்து விடைபெறுவதையும்
கண்முன்னே
கண்டுவிட்டேன்

பணம்கொண்டவன் ஆயுள் முழுதும் திருப்தியைத்
எப்படியேனும்  வாங்கி
விடுவேன் என அலைந்து திரிவதையும்
இல்லாதவன் இருப்பவனைத் தேடுவதும்
வாழ்க்கையின் சாபம் எனக் கண்டுவிட்டேன்

ஓர் நாள் நிச்சயமாய் எல்லோரும் ஓர்
பாதையை  அடைந்தே தீரப் போகிறோம்
தனியே பயணிக்கும் அந்த பயணப் பாதையை
மீண்டும் மீண்டும் மீட்டிப் பார்த்து விட்டேன்

முழுதாய் பொய்யாகிப் போன இந்த உலகத்தில்
உண்மையான நேசம்  என்பது மட்டும்
எவ்வகையில் உண்மையென
இருந்துவிடப் போகிறது  என்பதில் தான்
ஆகப் பெறும் சந்தேகம் ஊசலாடுகிறது...

**நீர்ப் பறவை**

# நொடிநேர பொழுதுகள்



எப்போதோ ஒரு
பேருந்து பயணத்தில்
கிடைத்த பேச்சுவாக்கில்
கிடைத்த கொஞ்சநேர நண்பர்

நீண்ட நேர ரயில்
பயணத்தின் தடக்தடக்
சத்தத்தை ரசிக்க முடியாது
தன் துக்கத்தை சடக்கென
பகிர்ந்து கொண்ட ஒரு முகம்

மருத்துவமனை வாசலில்
அறிமுகமற்று தன்
பிரச்சனையை சொல்லி
ஆறுதல் பெறும் நபர்

நம் ஈருருளிப்
பயணங்களில்
சைகை காமித்து
துப்பட்டாவை முடிச்சிட்டு
செல்லச் சொல்லுமொரு முகம்

ஏதோ ஒரு ஊரில்
நான் தொலைத்து விட்ட
பணத்தை வேகமாக
ஓடிவந்து தந்து சென்று
உதவிய கைகள்

இவர்களெல்லாம்
என்கைகளில்
பட்டாம்பூச்சியென
நொடிநேரமே
அமர்ந்து போனவர்கள்

அதன் நீட்சியென
அங்கே பயணிக்கையில்
எல்லாம்
அவர்களைத் தேடுகிறது
என் கைகள்
வண்ணத்துப் பூச்சியின்
ஒரு நிமிடத் தங்கலுக்காய்!

சுபி



ஆலா
நான் பார்க்கும் திசையெல்லாம்
உன் சாயலில்
யாரோ இருக்கிறார்கள்

வலிய வந்து
அவர்களே எனக்குப்
பயணம் சொல்லிச்செல்கிறார்கள்

கூடவே ஒரு
மலர்ச்செண்டையும் தருகிறார்கள்

அதன் ஒவ்வொரு இதழ்களிலும்
உன் பெயர் பொறிக்கப்பட்டதாயும்
காட்டுகிறார்கள்

இதையெல்லாம் - மொத்தமாய்
உன்னிடமே
சேர்க்க வேண்டுமென்றும்
ஆணையிடுகிறார்கள்

அப்படியே,

எதேச்சையாய்
ஒரு குழந்தையைக் காண்கிறேன்
அவளது தாய்
உன் பெயரைச் சொல்லித்தான்
அவளை அழைப்பதாயும் கேட்கிறேன்

நான்
யாரென்றே அறியாத அந்தக் குழந்தை
என்னைப் பார்த்துச் சிரிக்கின்றது

அதன் குழந்தைத்தனத்தால்
என்னிடம் ஏதோ சொல்கின்றது,
மீண்டும் மீண்டுமாய்
என்னைப் பார்த்துக்
கையசைக்கின்றது,
குழந்தை மொழியில்
என்னோடு பேசுகின்றது

ஆலா
இதோ
இந்தக் குழந்தை - நான்
இவளை ரசிப்பது போலவே - உன்
குழந்தைத்தனங்களையும்
ரசிக்கவென - எனக்கு
அதன் பாஷையை
சொல்லித் தருகின்றது

ஒரு பாடமே நடத்திச் செல்கின்றது......

முஸ்னி முர்ஷிட்



துயரத்தின் அடர் நிறங்களில்
குழைந்து கொண்டிருக்கும்
இந்த வாழ்வே ஒரு கெட்ட கனவாகி
திடீரென்று ஐந்தாம் வகுப்பிலோ
நான்காம் வகுப்பிலோ
கண் விழித்துவிடமாட்டோமா என்பதே
ஒரு பெரும் கனவாகி ஏக்கமாகி துக்கமாகி
நெஞ்சை அடைக்கிறது

எங்கேனும் மரத்திலோ ஆற்றிலோ
கண்மாயிலோ குட்டையிலோ
குழந்தைகள் ஆடுவதைக் காணும் போது
எனக்குத் தாளமாட்டாமல்
கண்ணீர் வருகிறது.

**மழைக்குருவி**

உன் சாயலில் தொலைந்து
போகும் என்னை-
சடுதியில் மீட்டி விடுகிறது
உன் செல்ல அழைப்பு.......!

**மேகலா செந்தில் குமார்**



மிகப்பெரிய நூலகமாகத்தான்
சுமைதாங்காது
மெல்ல நடமாடுகிறது முதுமை...
“அப்ப வந்த பஞ்சத்தப்ப
கைப்பிள்ளையாயிருந்த
உன்னையும் தூக்கிட்டு
ஊரு விட்டு ஊரு வந்தோம்...”
“அப்பல்லாம் ஒரு சவரன் தங்கம்
வெறும் அம்பத்திரெண்டு ரூவா”
“1978ல தான் வீட்டுல மொதமொத
ரேடியோ ஒண்ணு வாங்குனேன்”
“காமராஜர கடைசியா பாக்கணும்னு
ட்ரெய்ன்ல அடிச்சுப்புடிச்சி ஏறி
மெட்ராஸ் போனேன்”
எந்த நூலிலும் எழுதப்படாத
எக்கச்சக்கமான வரலாறுகளோடு
திரிகிறார்கள் முதுமை சுமந்தே...
நூலகத்தில் குவிந்திருக்கும்
ஒட்டுமொத்த அனுபவங்களையும்
முதுமைக் கறையான் அரிக்க அரிக்க
ஏதோவொரு நாளில்
ஒற்றை நூலுமில்லாத
வெற்று நூலகமாகக்கூடும்...
அத்தருணத்தில் யாரேனும்
“என்னை யார்னு தெரியுதா?”
எனக் கேட்க
புன்னகைக்கிறது நூலகம்...

வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்

# துரு



துருப்பிடித்தல்
காத்திருத்தலின் வலியேறிய செதில்

ஒரே இடத்தில்
நீடித்து நிலைத்தலின்
தவம்

செஞ்சாந்து நிற உடையணிந்த
சிரிக்கும் சிரமம்

எதெததற்கோவான
குறியீடாகி நிற்கும்
படர்ந்து கிடக்கும் துகள்திரள்வான்

துருப்பிடித்தலின் மணத்திற்கான நிறம்
நாசி பார்க்கும்

துருப்பிடித்தலின்
நிறத்திற்கான மணம்
கண்கள் சுவாசிக்கும்

அதிஅலாதியானது
துருப்பிடித்தலின் மணம்

சுகந்தமானது
துருப்பிடித்தலின் நிறம்

துருதான் இரும்பின் பலம்
துருதான் இரும்பின்
சுயம் படிந்த நிழல்

துருப்பிடித்தல் துயர்தாங்கும் உயர்தனி வலிமை

துரோகம் மறக்க
மனம் துருவேற ஆசை
துருப்பிடித்தலின் சுகம் உணர்ந்ததால்

ரா.ராஜசேகர்



உள்ளாடை நழுவியதையறியாது
தெருவோரம் கிடக்கும் அப்பனின்
முகம் மறக்க......
ஒரு அங்குலம் முகத்தின் மேல்
அரிதாரம் பூசுகிறாள்....

பொறுப்பில்லா கணவனால்
உயிர்ப்பிழந்த விழிகளை
வண்ண ஜிகினாகளால்
மறைக்கிறாள்....

சுடர் இல்லா அடுப்பின் சுடராய்
போலி நகைகளால் சுடர்கிறாள்...

தன் மகளின் எதிர்காலம் இறுக்கிவிடாமலிருக்க....
துண்டுத் துணிகளாய்
சிறு இடுப்பு உடுப்பை இறுக்குகிறாள்....

நையாண்டி மேளமும்,செண்டைமேளமும்
அவள் தொழிலுக்கான சங்கொலி
கூச்சம் விடுக்கிறாள்....
கரகசொம்பு அவள் சொல்லுக்கு
ஆடுகிறது.....

கண்ணுக்குள் விராவி கிடக்கும்
வலிக்கு
அவள் உடல் குலுங்குகிறது ....
அடுத்த வாய்ப்புக்கு
தன்னிலை மறந்து குலுங்குகிறது
அவளது மேனி.....

கண்களால் கற்பை சூரையாடும்
கும்பலுக்கும் கைத்தொழுகிறாள்....

நாதஸ்வரத்தால் அவள் நாபியை
ஊதும்...
அண்ணன்முறை உறவுகாரனின்
மூச்சுக் காற்று அழுதே வெளிவருகிறது.....

பணத்தை
மார்பு கச்சையில் தடவி..... குத்திச்செல்கிறான்
ஒருவன்...
பல புழுக்கள் ஊறுகிறது
அந்த பணத்தில்.....

புழுக்களை சாப்பிட்டே பழகிப் போனது
அவள் வயிறு.....

கிளுகிளுப்பு கூத்தாய்
பொழுதுப்போக்காக மாறிப்போனது நமக்கு....

அவளும் வாழவைத்துவிடலாம்
இக் கலையையென...
அரிதாரம் பூசுகிறாள்
அடுத்த குடக்கூட்டத்துக்கு....

ஸ்ரீவாரிமஞ்சு



பலூன்களால்
வீதிகளை நிரப்பப் பிரயாசைப்படுகிறான்
பலூன் விற்பவன்

திருவிழாக் கூட்டத்தை
இசையினால் நிரப்பப் பிரயாசைப்படுகிறான்
புல்லாங்குழல் விற்பவன்

மணியடித்து மணியடித்து
இரவு வீதிகளை
ஜில்லிட வைக்க பிரயாசைப்படுகிறான்
குல்பி ஐஸ் விற்பவன்

வாசனைகளால்
வீதிகளை நிரப்பப் பிரயாசைப்படுகிறான்
பூக்கள் விற்பவன்

காற்றுவெளியெங்கும்
வானவில்களை
பறக்க விட பிரயாசைப்படுகிறான்
குமிழ் குப்பிகளை விற்பவன்

வண்ணங்களால்
குடியிருப்புகளை நிரப்பிவிடப் பிரயாசைப்படுகிறான்
கலர் கோழிக்குஞ்சுகளை
விற்பவன்

மேகத்தை எப்படியாவது
மனிதர்கள்
தின்றுவிட வேண்டுமென்று
பிரயாசைப்படுகிறான்
பஞ்சுமிட்டாய்க்காரன்

நீங்களொன்றை கவனித்தீர்களா
மேற்கூறியவர்கள்
கடைசி வரை எதையுமே விற்பதில்லை
இவர்களின் பிரயாசையெல்லாம்
இந்த பூமியை கவிதைகளால் நிரப்ப
வேண்டுமென்பதே

**மகேஷ் சிபி**



உன்னிடம் எதுவுமில்லையென
நீ புலம்பும் பொழுதுகளில்

உன்னிடம் இருப்பவைகள்
கரம் தட்டி சிரிக்கின்றன
ஓர் ஓரமாய் நின்று..

பத்திரப் படுத்திக் கொள்ள
சில நினைவுகள்

பார்த்து பார்த்து
பரவசமடைந்த
ஒரு புகைப்படம்

பாட்டி தந்த
பத்து ரூபாய் தாள் ஒன்று..

பந்து விளையாடப் போய்
பள்ளத்தில் விழுந்த
வீட்டின் பின்புறம்

அடிக்கடி மாங்காய் பிய்த்து
அலுத்துப் போன
நண்பன் முகமென

உன்னிடம் எதுவுமில்லையென
நீ புலம்பும் பொழுதுகளில்

கைதட்டி சிரிக்கும் அத்தனையும்
உன்னிடமே
உன்னோடே இருப்பவை தான்..

இல்லையெனும் புலம்பலை
இல்லாமலாக்கி விட்டு

இருக்கும் நினைவுகளையேனும்
புல்லாங்குழல் இசையாய்
இன்னொரு முறை
மீட்டிக் கொள்ளுதல்
அத்தனை சுகம் நிறைந்ததல்லவா...

ஷப்ரா இல்முத்தீன்



ஒளிபரப்பே ஆகாத தொலைக்காட்சியின் முன்
காலை நீட்டியபடி அமர்ந்திருந்தாள்...
கோவிலுக்கு சென்று வந்தவள்
ஒவ்வொரு சன்னதிக்கும்
தவறாமல் சென்றதை
நெற்றியில் அழுந்த பதிந்த
மஞ்சள் குங்குமமும்
எண்ணெய் பிசுபிசுத்த அவளின் அடி பாத
அழுக்குகளும் சொல்லியது...
கையினால் தன் காலை
நீவி விட்டுக்கொண்டிருந்தாள்...
கால் விரல்களை
மடக்கி மடக்கி விரித்தபடி
ஒருவித பயிற்சி செய்துகொண்டிருந்தாள்..
முதுகினை சுவர் தாங்க
கண்கள் சுழலும் மின் விசிறியை மூடியபடியே
பார்த்துக்கொண்டிருந்தது...
போகின்ற போக்கில் அவளை பார்த்தவன்
ஒரு முறை கால்கள் ஏதேனும்
வலிகின்றதாயென்றான்..
இருளிலிருந்து ஒளிப்பெற்றவள் அவனை பார்த்து
புன்முறுவலாய்
அப்படி ஏதுமில்லையென்று
மெல்ல எழுந்து நடக்க துவங்கினாள்..
நீரை எதிர்பார்க்காத
மலர்களுக்கு காற்று செய்யும் வைத்தியம்.

சரண்யாசத்தியநாராயணன்



ஆறு பெருக்கெடுத்து
ஓடிக் கொண்டிருக்கிறது.
அன்று பார்த்ததைப் போன்ற
வனப்பு இல்லையென்றாலும்
ஆகாயத்தாமரைகளையும்
அபகரிக்கப்பட்ட மணல் குழிகளையும் தாண்டி
இன்று
பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்றது.
நாகரிகம் வளர்ந்த அதன் கரைகளில்
கழிவுகள் கரைந்து கொண்டிருந்துதானிருக்கின்றது.
எனினும் ஆறு சலிப்பின்றித்
தன் கடமையை ஆற்றுகின்றது.

குடங்களில் எடுத்துவரும்
ஆற்றின் நீரை
அன்றைக்கும் போல
இன்றும் குலதெய்வச் சிலைகள்
நனைத்துக் கொள்கின்றன.

இடம் பெயர்ந்த தலைமுறைகளை
எண்ணியபடியே
இடம்பெயராத தெய்வத்தைப்
பூசனை செய்து

கைப் பேசியின்
ஒளிப்படங்களில்
தெரிகின்ற
பிள்ளைகளின் முகங்களைப் பார்த்து
அன்னையர்கள்
பூசாரியின்
திருநீற்றுச் சாம்பலை
கண்ணீர் ததும்பப்
பூசிக் கொள்ளுகின்றனர்.

ரவி குமாரசாமி

# டெசிபல் அளவு



ஒலி மாசுபடுவதை
டெசிபல்
அளவீடு வைத்து
அதற்கு மேல்
சப்தம்
எழுப்புவோருக்கு
அபராதம் விதிப்பது
அரசின் விதியில்
இருக்கிறது.

என் தாய்
என்னை
பெற்றெடுக்கும் போது
எழுப்பிய ஒலியை
அளவீடு செய்ய இயலாது.
அது வலியின் ஒலி.

ப.ராஜகுமார் சிவன்

உன்னால் கையளிக்கப்பட்ட
கடலின் ஆழத்தில்
உன்னால் கைவிடப்பட்ட
காதலின் மௌனத்தை புதைத்துள்ளேன்
சோர்ந்த பொழுதெல்லாம்
உன் நினைவின் அலைகளோடு மோதி
என்னை உயிர்ப்பிக்கிறேன்

போஸ் பிரபு



சிறு இடைவெளியில்
மௌனம் பனியாய் உறைந்திருக்கிறது.
யுத்தமுகாந்திரன்
தன் நாவை அங்கும் இங்கும் அசைக்க....
தொலைந்துவிட்டத் தவறுகளைத்
தேடிப் பிடித்துப் பட்டியலிடத் தொடங்குகிறோம்!
கூட்டல் கழித்தலில் கணக்கு
சரிவிகிதம் என்றாலும்
கூடுதலாய் ஒன்று சேர்க்கக் காரணம் கோர்க்கிறோம்!
மௌனத்தை
மரணம் அரிக்கத் தொடங்குகிறது....
ஜதிக்கட்டியாடும் சுயம் முகமூடியைக் கழற்றி வைக்க
நாங்கள் தொலைந்து
எங்களையே தேடத் தொடங்கும் போது
கடிகாரம் சுழற்சியை நிறுத்தி
வேடிக்கை பார்க்கத் தொடங்கியது!
.

முகமது பாட்சா

குட்டியப்பர்கள் படித்து மூடி வைத்த புத்தகத்தை
நடுநிசியில் புரட்டிப்பார்த்துக் கொண்டிருக்க கூடிய
மின்விசிறி எத்தனையாவது படித்திருக்கும்?

புன்னகை பூ ஜெயக்குமார்

# மலரினும் வலியது



கனவுகளில் நான் காற்றை
அணிந்து விஜயம் செய்கிறேன்

பொன்மகரந்தம் சூடிய மார்பில் கருவண்டுகளென
மொய்க்கத்துவங்குகின்றன
மூடிய உன் கண்கள்

என் ஒளிவட்டம் கண்டு கூசிக் கிடக்கும் உன்னை
ஆற்றுப்படுத்தி நுழைவிக்கிறேன்

நுனிவிரல் சிணுங்கல்கள்
மெல்லப் பரவி
உள்ளங்கை உரையாடல்களாகின்றன

எளிதாக என்னைக்
கையாள எண்ணும் உன் செருக்கு மண்டியிடுகிறது
என்
மாமதத்தின் காலடியில்

வேறோர் உலகைக் காட்டும் என் முன்னால்
நீ சிறு துகளென
அலைந்து கொண்டிருக்கிறாய்

இன்னும் சிறிது நீ உயிர்த்திருக்கவென
சுழல் முடித்து விடுவிக்கிறேன்

வியர்வைத் துளிகள் மூர்ச்சை
தெளிவிக்க விழிதிறக்கிறாய்

என் வாசத்தைக் காற்றில் மிதக்க விட்டு என்றும்
எனை நீங்கா
வரமளித்து விடைபெறுகிறேன்
நீயான நான்

கி. சரஸ்வதி



ரயிலின் பொதுப்பெட்டியில் பயணிக்கையில்
அவ்வளவு சீக்கிரமாய்
அறிமுகமாகிவிடுகிறார்கள்
அருகில். உட்கார்ந்திருப்பவர்களும்
நின்று கொண்டிருப்பவர்களும்

ஐந்துபேர் மட்டும்தான் அமரமுடியும்
ஆனாலும் நகர்ந்து உட்கார்ந்து
இடம் கொடுக்கிறார் ஒரு முதியவர்

எங்கே செல்கிறாய்
எங்கே வீடு எங்கே வேலை என
விசாரிக்கும் இன்னொரு பக்கத்திலிருப்பவர்
தன்னைப்பற்றிய விவரங்களை
கேட்காமலே கூறி
மனதுக்குப் பக்கத்தில் நெருங்கி அமர்கிறார்

எதிரே அமர்ந்திருப்பவர்
தன் பைக்குள்ளிருந்து தண்ணீரெடுத்துக்
குடித்துவிட்டு
பார்க்கும் என்னிடம்
வேண்டுமா என நீட்டி
என் தாகம் தணிக்கிறார்

நின்றுகொண்டிருக்குமொருவர்
வார இதழொன்றை நீட்டி
பயணத்தை இன்னும் எளிதாக்குகிறார்

கடலை விற்றுக்கொண்டு வருபவர்
இரண்டு ரூபாய் குறைவாக உள்ளது
என்றபோதும் முகம்சுளிக்காமல்
கடலை கொடுத்துவிட்டு நகர்கிறார்

குளிரூட்டப்பட்ட வசதியில்லை
படுக்க வசதியில்லை
வாசனைத் திரவியங்களின்
நாசித் தழுவல்கள் இல்லை
தள்ளித் தள்ளி வசதியாய் அமர்ந்திருக்கும்
தன்னிருக்கையென்ற வசதியில்லை

ஆனாலும் இறங்குகையில்
பயணக் களைப்பேயில்லை

**சௌவி**



தொடைக்கடியில்
குருதி வழிந்தோடும் பெண்
அக்குருதியிலேயே
கப்பல் விடும்
ஓவியமேந்தி
சானிடரி நாப்கின்
வரிக்கு எதிராய்
குரல் கொடுத்தபின்;
ஆயாசமாய் வீட்டு சோபாவில்
வந்தமர்ந்தவளை
வரலட்சுமி பூஜை தூமைக்காய்
அவசரமாய் கிளப்பிவிடுகின்றாள்
அவளின் ஆதார குருதி;
மேலும் சில சுமங்கலி குருதிகள்
இவளின் மேல் பட்டு விடாமல்
ஒதுங்கி வீட்டினுள் நுழைய
பூஜைக்குரிய தெய்வகுருதி மட்டும்
நடு வீட்டில் அலங்காரமாய்.....

கோ.ஸ்ரீதரன்



உன்னோடு பேசுவதற்கு
இந்த இடம்தான் வாய்த்திருக்கிறது
அல்லது இதைத்தான்
தேர்ந்திருக்கிறேன் நான்

சூரியன் அந்தியை நெய்து கொண்டிருக்கும்
சமுத்திரக் கரையில்
இவ்விடத்தின் தற்கொலைகள் சில
என் நினைவில் வந்து போகின்றன

நீ வரும்முன்
பெரும்பாறைகளைப் புரட்டிப்போட்டு
என்னை மூழ்கடிக்கும் பேரலை வரலாம்
அல்லது
கீழே கிடக்கும் குறியுறையை
மொய்க்கும் எறும்புகளைப்போல்
பூமி வெறுமனே சுழன்றிருக்கலாம்

சோம்பிக்கிடக்கும்
நாய் ரோமங்களுக்கிடையே ஊறும் உண்ணிகள்
காரணமின்றி
உன் கூந்தலையும் என் விரல்களையும்
நினைவு கூட்டுகின்றன

இருட்துளைக்குள்
தன்னைப் புகுத்திக்கொண்டிருக்கும்
இந்த நிலத்தில்
புதைந்த நம் முத்தங்களின் மீது
ஊர்ந்து திரிகின்றன இணை நண்டுகள்

உன்னுடைய வரவை உறுதிசெய்யும்
எந்த நிமித்தமும்
இத்தனை காலம்போல்
இன்றும் இல்லை
இருந்தாலும்
இதே இடத்தில்
உன்னுடன்
பேசிக்கொண்டிருப்பது இதமாகத்தான் இருக்கிறது.

சுப. முத்துக்குமார்



சில பொருட்கள்
சில இடங்கள்
சில பாடல்கள்
சில வாசனைகள்
சில நினைவுகளை
சில உறவுகளை
சில மனிதர்களை
நினைவூட்டும்

கார்த்திகை மாதம்
அப்பாவை
கலர் பிச்சி
அத்தையை
சோள தோசை
பாட்டியம்மாவை
இலையில் அல்வா
தாத்தாவை
பன்னீர் ரோஜாக்கள்
பெரியம்மாவை
கோலி சொடா
பக்கத்துத் தெரு பெரியப்பாவை
பச்சைக் கிளிகள்
குரு சித்தியை
சிறு கதைகள்
மாமாவை
கலை பொருட்கள்
குட்டி மாமாவை
முருகனின் பாடல்கள்
அத்தானை
என எத்தனை எத்தனையோ
நினைவுத் துளிகள்
அவ்வப்போது நனைத்து செல்லும்
நேற்று கண்ட
கௌுத்தி மீன்கள்
அப்பத்தாவின் நினைவோடு
உறங்கிக்கிடந்த
சுவை நான்களையும்
கிளர்த்தது.

அந்நினைவுகளை
இவ்வுணர்வுகளை
எந்த கணினிகள்
கைபேசிகள்
சேகரிக்கக்கூடும்.

**தீபிகா சுரேஷ்**


RN BALAJI PRODUCTION
FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP - MARUTHA NAYAGAM BOSE - MUSIC - DEV PRAKASH
EDITING -TAMILARASAN - CHOREOGRAPHER - ABU&CHALAS - PRO - NIKIL MURUGAN
CO PRODUCERS - MOHAMED ALI JINNA.M - SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY-BALAJI NEDUNCHEZHIYAN